**SC. 151/2024**
**18.02.2025**
அசா**.17** தினேஷ்
**1** முதல் **10** எதிரிகள் ஆஜர்**.**
முதல் விசாரணை தொடர்சி

நீதிமன்றத்தில் உள்ள 5 மூங்கில் கட்டை சாபொ**. 1** முதல் சாபொ**.5**. நீதிமன்றத்தில் உள்ள வெள்ளை நிற முழுக்கை சட்டை மற்றும் நீல நிற கைலி சம்பவ இடத்தில் வைத்து 1 ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>
1ம் எதிரி அழகேசனை போலிசார் சொல்லி நீதிமன்றத்தில் தான் முதன் முதலில் தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து தான் 2 கையெழுத்துகள் வாங்கினார்கள். அது தான் நான் முதல் விசாரணையில் சொன்ன ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்கள் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலத்தில் கைபெயழுத்து செய்துவிட்டு முதல் விசாரணையில் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி எதிரியிடமிருந்து எந்தவிதமான தடயபொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்தன்படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/ஜி.சுந்தரராஜன்

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS
COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW - 18

| | | |
|---|---|---|
| Name | முத்துகுமரவேல் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 18.02.2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

A1 to A10 Accused present.

முதல் விசாரணை

நான் பசுபதிகோவிலில் குடியிருந்து மளிகை கடை வைத்துள்ளேன். இறந்துபோன ஜெயக்குமாரை தெரியாது. அசா1 முதல் அசா4 ஐ தெிாயாது. ஆஜர் எதிரிகளை தெரியும். போன வருடம் ஏப்ரல் மாதம் மாலை 7.00 மணிக்கு எனது மளிகைக்கடைக்கு வந்தேன். போலிசார் என் மளிகைக்கடைக்கு வந்து ஜெயக்குமார் அடித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து தெரியுமா என்று கேட்டார்கள். நான் தெரியாது என்று சொன்னேன். காட்டப்படும் 1.4.2024 தேதியிட்ட பார்வைமகசரில் உள்ள முதல் கையயழுத்து என்னுடையது தான். எதற்காக போட்டேன் என்பது தெரியாது. கையெழுத்து மட்டும் அதசாஆ.**7**. 2.4.2024 தேதியிட்ட கைப்பற்றுதல் மகசிால் உள்ள முதல் கையெழுத்தும் என்னுடையது தான். எதற்காக போட்டேன் என்பது தெரியாது. அந்த கையெழுத்து மட்டும் அதசாஆ.**8**. போலிசார் என்னை விசாாிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையில்,01.04.2024 ம் தேதி மாலை 5 மணிக்கு பசுபதிகோவிலை சேர்ந்த செந்தில்குமார் மற்றும் அவரது உறவினர்கள் மற்றும் அவரது

நண்பர்களை 1 வது எதிரி அழகேசன் மற்றும் அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அடித்து காயப்படுத்தியதாகவும் அதில் ஜெயகுமார்இறந்துபோனதாகவும் அந்த சம்பவ இடத்டித என் முன்பாகவும் பன்னீர்செல்வம் முன்பாகவும் போலிசார் பார்வையிட்டு பார்வை மகசர்மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான் சாட்சியாக கையெழுத்துபோட்டேன் என்றும் பின்னர் இரவு 12.30 மணிக்கு எங்கள் முன்னிலையில் சாதாரண மண் சிறிதளவும், ரத்தம் தோய்ந்த மண் சிறிதளவும் பாலிதின் கவரில் எடுத்தார்கள் என்றும் சம்பவ இடத்தில் நின்ற TN 36 AZ 0660 என்ற பதிவுஎண் கொண்ட வெள்ளை நிற காரையும் TN 68 U 0730 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தையும் உடைந்த கண்ணாடி துகள்கள் சிறிதளவையும் மகசரில் கைபற்றினார்கள் என்றும் அதிலும் நான் சாட்சியாக கையொப்பம போட்டுவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

இல்லை.

ஒம்/ஜி.சுந்தரராஜன்

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்